# சட்டப் பேரவையில் முதல் அமைச்சர் – 12.8.2006

தமிழகச் சட்டப் பேரவையில் காங்கிரஸ் கட்சி உறுப்பினர் ஞானசேகரன் பேசும்போது மத்திய அரசின் குற்றவியல் நடைமுறை திருத்தச் சட்டத்தை எதிர்த்து தமிழகத்தில் இருக்கும் வழக்கறிஞர்கள் நடத்திவருகின்ற போராட்டம் குறித்து எடுத்துரைத்து, அதற்கு முதல் அமைச்சர் கலைஞர் அவர்களின் பதிலை எதிர்பார்ப்பதாகக் கூறினார். அப்போது முதல் அமைச்சர் கலைஞர் அவர்கள் கூறியதாவது :–

வழக்கறிஞர்கள் மத்திய அரசின் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் கொண்டு வந்துள்ள சில திருத்தங்கள் தொடர்பாக என்னைச் சந்தித்துப் பேசினார்கள். அவர்களின் கோரிக்கைகளை உடனடியாக தீர்த்து வைப்பதற்கு மத்திய அரசு முன் வரக் கூடிய சூழ்நிலை இது வரை அமையாவிட்டாலுங்கூட, வழக்கறிஞர்கள் என்னிடம் ஓர் உறுதி கேட்டுள்ளார்கள். மாநில அரசு சில பிரிவுகளை ஒத்தி வைத்து அந்தச் சட்டத்தை இங்கே அமல்படுத்தாமல் இருக்க வேண்டும், சில பிரிவுகளை விலக்கி வைக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். நானும் அவர்களுக்கு உறுதி அளித்திருக்கிறேன். அவர்கள் அதையேற்று நாங்கள் மாநில அரசின் மீது நம்பிக்கை வைக்கின்றோம், எனவே நாங்கள் நீதி மன்றத்தைப் புறக் கணிக்கின்ற அந்த நிலையை உருவாக்கமாட்டோம் என்று உறுதி அளித் திருக்கிறார்கள். நானும் அளித்த உறுதியை நிறைவேற்றுவேன், அவர்களும் அளித்த உறுதியை நிறைவேற்றுவார்கள் என்று நம்புகிறேன்.

இவ்வாறு முதல் அமைச்சர் கலைஞர் கூறினார்.

முதல் அமைச்சர் கலைஞர் :– மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வேல்முருகன் அவர்கள் எழுப்பியுள்ள பிரச்சினை உருக்கமானது என்பதை நான் உணருகின்றேன். ஆனால் ஒரு விளக்கத்தை அவருக்கு நான் தர விரும்புகின்றேன். புலம் பெயர்ந்து வேறு வழியில்லாமல் இலங்கையிலிருந்து வருகின்ற தமிழர்கள் இந்தியா விலே தமிழகத்திலே தங்க வைக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு இப்பொழுது இலங்கைத் தமிழர்கள் என்று கூட பெயர் இல்லை. அகதிகள் என்ற பெயர் தமிழர்களுக்கு இன்றைக்கு. நினைத்துப் பார்க்க முடியாத கொடுமை தான். இருந்தாலும் பல்லாயிரக்கணக்கிலே இந்திய நாட்டில் எல்லையோரங்களில், குறிப்பாக தமிழகத்தில் வந்து குடி அமர்ந்திருப்பவர் களுக்கு தமிழக அரசு அன்று முதல் இன்று வரை ஏற்ற உதவிகளைச் செய்து வருகிறது. பல ஆண்டுகளுக்கு முன்பு அவர்கள் அகதிகளாக இங்கே வந்தபோது அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதல் அமைச்சராக இருந்த போது, இலங்கை அகதிகளுக்கேற்ற உதவிகள் பலவற்றைச் செய்திருக்கிறார். அதற்கு அடுத்து வந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியானாலும் சரி, கடந்த காலத்தில் இருந்த அ.தி.மு.க. ஆட்சியானாலும் சரி, இலங்கைத் தமிழர்களை இங்கே அனாதைகளாக விட்டு விடவில்லை. முடிந்த வரை அவர்களுக்கு உதவி களை வழங்கியே வந்திருக் கின்றோம். இப்போது கூட இலங்கையிலிருந்து வந்துள்ள அகதிகள் எப்படி வாழ்கிறார்கள், அவர்களுடைய நலன்கள் முறையாகக் காக்கப்படுகிறதா, சுகாதார வசதிகளை அமைந்துள்ள இடங்களில் தங்க வைக்கப்பட்டிருக்கிறார்களா என்பதை யெல்லாம் அறிந்து ஆவன செய்ய அரசுக்கு, குறிப்பாக எனக்குத் தகவல் தர நம்முடைய அமைச்சர்கள் இருவரை அந்தப் பகுதிகளுக்கு அனுப்பி வைத்தேன். அவர்கள் அந்தப் பகுதிகளுக்குச் சென்று நிலைமைகளை எடுத்துரைத்து மத்திய அரசின் சார்பாக அந்த அகதிகளுக்கு மன்னிக்க வேண்டும், அந்தத் தமிழர்களுக்கு மாதம் இருநூறு ரூபாய் வழங்கப்படுகிறது, அது போதுமானதாக

இல்லை என்று என்னிடம் சொன்னார்கள். மத்திய அரசுக்கு எழுதிக் கேட்டு அவர்கள் அந்தத் தொகையை அதிகப் படுத்தி தருவதற்கு முன்பு நாமே அந்த முயற்சியில் ஈடுபடுவோமென்று மாநில அரசின் சார்பாக மேலும் 200 ரூபாய் அவர்களுக்கு வழங்க ஆணையிடப்பட்டிருக்கின்றது. அவ்வாறே வழங்கப்படுகிறது.

இதற்கிடையே அவர்களுடைய சிறார்களுடைய, மாணவர் களுடைய படிப்பைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். ஏற்கனவே அவர்கள் இங்கே மருத்துவக் கல்லூரி வரையிலே சேர்ந்து படிப்பதற்கான வசதிகள் எல்லாம் கடந்த காலத்திலே, இங்கே தி.மு. கழக ஆட்சி இருந்த போதும் சரி, எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சி இருந்த போதும் சரி, அவர் களுக்கு வழங்கப்பட்டது. இடையிலே என்ன காரணத்தாலோ, நான் யார் மீதும் குற்றம் சொல்லவிரும்பவில்லை. நீதி மன்றத்தில் அளிக்கப்பட்ட ஒரு உத்தரவினாலோ என்னவோ இடையிலே அந்த மாணவர்கள் போதுமான கல்வியைப் பெற முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. அதைப் பற்றியும் என்னிடத்திலே இலங்கைத் தமிழர்களுக்காக வாதாடக் கூடிய சிலர் தமிழகத்திலே இருக்கிறார்கள். சந்திரஹாசனைப் போன்றவர்கள் (செல்வா அவர்களுடைய மைந்தர்), மற்றும் சிலர் என்னைச் சந்தித்து அதைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள். இதை ஒரே வரி உத்தரவிலே நிறைவேற்றிவிடுவது என்பது இன்றைய சூழ்நிலையில் இயலாத காரியம். எனவே அந்த மாணவர்களுக்கு கல்விச் செல்வத்தையும் பெறுவதற்கு எப்படி வழி காணலாம் என்பதைப் பற்றி மத்திய அரசோடு விவாதித்து ஆவன செய்யப்படும் என்பதையும் வேல் முருகன் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.